# நினைவு மலர்



அமரர்

## திரு. வயிரமுத்து மாணிக்கராசா

அவர்களின் சிவப்பேறெய்தியமை குறித்த 31ம் நாள்

நினைவு மலர்

**25.02.2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சமர்ப்பணம்

எமையெல்லாம் பெற்று வளர்த்து
ஊனையும் உயிரையும் கல்வியையும்
ஊட்டிய தந்தையே
பாசமாய் எமை உள்ளத்தில் இருத்தி
பண்பட்ட மக்களாய் ஆக்கி வைத்தீர்
சோதனைகள் வாழ்வில் வந்தபோதும்
துவண்டிடாமல் நற்சேவை செய்தீர்
நல்ல வாழ்க்கைத் துணைகளை தேடித்தந்து
நல்வாழ்வு அமைய வழிசமைத்தீர்
வித்தகராய் வாழ்விலொளி
வீச வைத்த உத்தமரே ஆத்மசாந்தி பெற
எம் தந்தையின் பாதக்கமலங்களில்
இம்மலர்களை காணிக்கையாக்குகின்றோம்

இவ்வண்ணம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம்கை

## பஞ்சபுராணம்

### தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசியென் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானிவனன்றே.

### திருவாசகம்

பாரொடு விண்ணாய் பரந்தஎம் பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய்ச் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைப்பேன்
ஆண்டநீ அருளில்லையானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக வென்றருள் புரியாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறு வார்உலகில்
ஊரும் உலகுங் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ் பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குண நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தர் சஷ்டி கவசம்
## காப்பு
### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம்! நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும், நிமலனருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

### நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட
மையநடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால் எனைக் காக்கவென றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக!
வாசகன் மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறு முகம்படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரிகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரைக் கிலியும்
கிலியும் சௌவும் கிளிரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதிஎன் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க!
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க!
அடியேன் வதனம் அழகுவேல் காக்க!
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்வேல் இரண்டும் கண்ணிணைக் காக்க!
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க!
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய்தன்னைப் பெருவேல் காக்க!
முப்பத் திருபல் முனைவேல் காக்க!
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க!
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க!
மார்பை இரத்தின வடிவேல் காக்க!
சேரிள முலைமார் திருவேல் காக்க!
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க!
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க!
பழுபதி னாறும் பருவேல் காக்க!
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!
சிற்றிடை அழுகுறச் செவ்வேல் காக்க!
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க!
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க!
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வடிவேல் காக்க!
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க!
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க!
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க!
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க!
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க!
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க!
முப்பால் நாடியை முனைவேல் காக்க!
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க!
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க!
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க!
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க!
ஏமத்தில் ஜாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க!
காக்க காக்க கனகவேல் காக்க!
நோக்க நோக்க நொடியில் நோக்க!
தாக்க தாக்க தறையறத் தாக்க!
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் மிருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தன்எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு!
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடுந்துய ரங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலை சயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியை
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகு மாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யான்உனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவிநன் பூதியை
நேசமு டன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன்என் மீதுன் மனமகிழ்ந் தருளி
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேசமு டன்ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுஉருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன்எனவும் நல்லெழில் பெறுபவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழுவர்க்கு குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேவிய வடிவுறும் வேலவ போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே!
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரவண பவஓம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்.

## சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்



நமச்சிவாய வாழ்க நாதான் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமனிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன் பூம்கழல்கள் வெல்க
கரம் குவிவார் உன்மகிழும் கோன் கழல்கள் வெல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி.
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி.
சீர் ஆர் பெருந்துறை நம்தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணம்
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்
கண் - நுதலான் தன் கருணைக்கண் காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர் கழல் இறைஞ்சி
விண் நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்.
எண் இறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்று அறியேன்.
புல் ஆகி பூடுஆய் புழுஆய் மரம் ஆகி
பல்விருகம் ஆகி பறவை ஆய் பாம்பு ஆகி
கல்ஆய் மனிதர்ஆய் பேய்ஆய் கணங்கள் ஆய்
வல் அசுரர் ஆகி முனிவர் ஆய் தேவர் ஆய்
செல்லாஅ நின்ற இத்தாவர – சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்.
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரம் ஆய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்து அருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே.
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே.
ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்து உலகும்.
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்.
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே.
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்
சிறந்து அடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த

மறைந்து இருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை.
மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அரும்கயிற்றால் கட்டி
புறம் தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பு ஆகிக் கசிந்து உள்உருகும்
நலம் தாள் இலாதா சிறியேற்கு நல்கி
நிலம் தன் மேல் வந்து அருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயின் கடையாய்க கிடந்த அடியேற்குத்
தாயின் சிறந்த தயா ஆன தத்துவனே
மாசு அற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர் அமுதே சிவபுரனே
பாசம் ஆம்பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே.
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெட
பேராது நின்ற பெரும் கருணைப் பேர் ஆறே.
ஆரா அமுதே அளவு இலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே.
நீராய் உருக்கி என் ஆர்உயிர் ஆய் நின்றானே.
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே.
அன்பருக்கு அன்பனே யாவையும் ஆய் அல்லையும் ஆம்.
சோதியனே துன் இருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடு ஆகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்
நோக்கு அரிய நோக்கே நுணுக்கு அரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பு அரிய பேர் ஒளியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்று இன்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளி ஆய்ச் சொல்லாத நுண் உணர்வுஆய்
மாற்றம் ஆம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவு ஆம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்று ஆன உண் ஆர் அமுதே உடையானே
வேற்று விகாரா விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனே ஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்து இருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டுஅழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

**சிவபுராணம் முற்றிற்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணேச்சரப்பதிகம்

1. நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகற் பிளவும்
அருள்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே

2. கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியென நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து
கொள்ள முன் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே

3. பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடைமுடி யிடைவைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகம்
ஆகமுன் கலந்தவர் மதில்மேல்
தனித்தபே ருருவ விழித் தழல்நாகம்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

4. பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன்தேவி வேண்ட முன்கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடல் தரளஞ்
செம்பொனும் இப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் திரைகள் கடையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றி சைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர் பால்நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

6. பரிந்து நன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்த வற்கருளுஞ்
செம்மையார் நம்மையாளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லைக் கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே

7. (7ம் பாடல் கிடைக்கவில்லை)

8. எடுத்தவன் தருக்கை யிழித்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே.

9. அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம் ஒள் எரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேரும்
நெறிய லாதன புறங்கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசினர் ஒரு பால்
மெல்லிய லொடும் உடனாகித்
துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபலமோதிக்
குன்று மொன்கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந்தாரே

11. குற்றம் இலாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞான சம்பந்தன்
உற்ற செந்தமிழ் ஆர்மாலை ஈரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமும் ஆகித் தொல்வினை அடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

..........................

## சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே -1

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே -2

அளிக்குஞ் செந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே -3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே சகல கலாவல்லியே -4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும்வெள்ளை
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே -5

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழிதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகல கலாவல்லியே -6

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே -7

சொல்விற் பனமு மவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே -8

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே சகல கலாவல்லியே -9

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே -10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஞ்சநேயர்

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி
அஞ்சிலே ஒன்று ஆறாக ஆரியர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக்கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் நம்மை
-அளித்துக்காப்பான்

எவ்விடத்தும் இராமன் சரிதையாம்
அவ்விடத்திலும் அஞ்சலி அத்தனாய்
பவ்வமிக்க புகழ்த் திருப்பாற்கடல்
தெய்வதாசனைச் சிந்தை செய்வாய் அரோ

'மும்மை ஆம் உலகம் தந்த முதல்வற்கும் முதல்வன்
-தூது ஆய்'
செம்மையாய் உயிர் தந்தாய்க்குச் செயல் என்னால்
- எளியது உண்டே?
அம்மை ஆய், அப்பன் ஆய் அத்தனே! அருளின்
- வாழ்வே!
இம்மையே மறுமைதானும் நல்கினை, இசையோடு
- என்றாள்.

## காயத்திரி மந்திரம்

ஓம் பூர் புவ ஸ்வஹ
தத் ஸ்விதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோநஹ ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல் அகவல்

மாணிக்கத் தீவாம் ஈழவளநாட்டின் கீழ்க்கரையில்
சிப்பி நிறைந்து முத்துக்கள் விளையாடும் மூதூரிலே
செல்நெல்லும் முக்கனியும் பாலோடு தேனும்
சிந்தி நிற்கும் பழமை நகராம் சம்பூரிலே
ஆயிரத்து தொளாயிரத்து நாற்பத்தேழிலே முன்னவளாய் தெய்வச் சோமசுந்தரமும்
ஏக சகோதரியாய் சவுந்திரமணியும்
சின்னத்துரையும் குழந்தைவேலும் செல்வ மகனாய்
மாணிக்கராசாவும் பின்னவனாய் சண்முகராசாவும் வளர்ப்பு மகளாம் மனோன்மணியும்
சகோதரர்களாயினர் துந்தையாரின் நல்ல கமத்தினாலே
செல்வம் பெருக்கி வாழ்ந்து வரும் போதில்
கலகலப்பும், சுறுசுறுப்பும் அன்புச் சிரிபுமாய் மாணிக்கராஜா வளர்ந்து வருவது கண்டே
பெற்றோரும் மற்றோரும் அகமகிழ்ந்து ஆனந்தம் கண்டனர்
சிறுவயது முதலாய்க் கல்வியில் நாட்டமும்
உள்ளத்தே நல்ல இறை பணியுமாய்
பஞ்சாட்சர மந்திரமும் உச்சரித்தே வந்தார்
கல்வி வளம் தேடிப் பெற்றோர் சம்பூரிலே
வயிரமுத்து இராசம்மா தம்பதியர்க்காய்
மேன்மைக்கல்வி கற்றிட சம்பூர் மகாவித்தியாலயத்தே
நிறைவாய் பெருமையாய்ச் சேர்த்து வைத்தார்.

காலமும் நேரமும் விரைந்து மறையவே
க.பொ.த சாதாரண தரத்தை முழுமையாய் கற்றே
விவசாயத்துறையில் கொண்ட ஈடுபாட்டினால்
கரடியனாறு விவசாயப் பயிற்சியை
அகவை இரண்டு வரை நிறைவாகப் பெற்றார்
நகைச்சுவை உணர்வால் நண்பர்கள் கண்டே
மனம் நிறைவோடே மகிழ்ச்சியாய் வாழ்ந்தார்
ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்து நான்கில்
காணி வெளிக்கள உத்தியோகத்தராகியே
அரச பணியிலே நிரந்தரமாய் இணைந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளி மீது அதீத பக்தியும் கொண்டே
இளைஞராகி பல தொண்டு புரிந்தார்
தமிழ்க்கலா மன்றத்தில் மகிழ்வாய் இணைந்தே
பிரதேசமெங்கும் பெரும் புகழ் பெற்றே
நாடக நடிகனாய் கிழக்கின் பாகங்கள்
நினைத்துச் சிரித்திட காசியம் செய்தார்
திருமணவயதும் விரைந்து வரவே
இராசையா அழகம்மா தம்பதியர் பெற்ற
ஏணியாய் இருந்தே மாணவரை உயர்த்திய
நல்லாசிரியையாம் இராஜேஸ்வரியை
ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தெட்டிலே
திருக்கரம் பற்றியே திருமணம் செய்தார்
ஊரும் உறவும் போற்றிடும் தம்பதியாய் இருவரும் இணைந்து
வாழ்ந்திட்ட வேளை மணவாழ்வின் அம்சமாய் சுஜேந்தினியும்
பண்புடனே அனிசாவும் கடைக்குட்டியாய் சுமங்கலாவும் சீராய்ப்
பிறந்தனர்

தாயை இழந்த தங்கலெட்சுமியையும்
தங்கமாக வளர்த்து கல்வியை ஊட்டி
சிறிஸ்கந்தராசாவிற்கு திருமணம் செய்து
நல்வாழ்க்கையை அமைத்துக் கொடுத்தார்.

மக்களாய் பேணி கல்வியை ஊட்டி
இல்லறமதை நல்லறமாகப் பேணியே
கருத்தொருமிக்க வாழ்ந்திடும் வேளை
தொண்ணூற்றி நான்கில் பெருமையாய்
குடியேற்ற உத்தியோகத்தராய் உயர்வு பெற்றார்
மனைவியும் அதிபராய் ஸ்ரீமுருகன் சென்றிட
இனிய வாழ்விலே அமைதியும் கண்டார்
கற்ற கல்வியை விவசாயத்தில் காட்டியே
பேரானந்தமாய் வாழ்வினைப் பெற்றார்
அண்ணன் என்றே இளைஞர்கள் அழைக்க
தம்பியாய் அழைத்தே பெருமையும் கண்டார்
செல்நெல் விளையும் தம்பலகாமம்
நல்ல ஈச்சிலம்பற்று மூதூர் என சேவை நீள
கருமமாற்றி உதவிகள் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமும் நேரமும் வேகமாய் மாறிட
குடிவழியாலே பரிபாலன சபைத்தலைவராகி
அனைவரேர்டும் இணைந்தே தொண்டுகள் செய்தார்
காலமும் கோளும் மாறிடும் வேளை
இரத்த அழுத்தம் சேர்த்து வரவே
பாரிச நோயால் வாடியே நின்றார்
ஐம்பத்தேழாவது வயதும் சேர்த்து நிற்கவே
தொழிலிலிருந்து ஓய்வும் பெற்றார்
மனைவி மக்களின் அன்பாலே நோயைத் தாங்கி
மக்களை உயர்த்திட கனவுகள் கண்டார்
கண்ட கனவை நனவுமாக்கியே
மூத்தமகள் சுஜேந்தினி அபிவிருத்தி உத்தியோகத்தராகவும்
நடுமகள் அனிசா அபிவிருத்தி உத்தியோகத்தராகவும்
கடைக்குட்டி சுமங்கலா ஆசிரியையாகவும்
பட்டதாரிகளாக நியமனம் பெற்று
அரச பணியிலே அமரவும் செய்தார்

நல்ல மனைவியைப் பெற்றதனாலே
ஆனந்த வாழ்வும் நிறைந்தும் வந்தது
போரின் கொடுமையில் சிக்கித்தவித்தே
சம்பூரை விட்டே மட்டு நகர் சென்றனர்
காலமும் மாறி நேரமும் சரிவரவே திருகோணமலைக்கு வந்து சேர்ந்தார்
சுமேதகமவில் வசிக்கும் வேளையில்
காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு
மூத்த மகளாம் சுஜேந்தினிக்கு அன்புளோர் வாழும் அன்புவழிபுரத்தின்
திலக ரெத்தினத்தின் சிரேஷ்ட புத்திரன்
முகாமையாளர் தினேஷ் இற்கு சிறப்பாகவே திருமணம் செய்து வைத்தார்
லிங்க நகரில் வசிக்கும் வேளையில்
இரண்டாவது மகள் அனிசாவிற்கு
கம்பர் மலை வாழ் கணேஸ்வரனின்
சிரேஷ்ட புத்திரன் பொறுப்பாளர் சுபாகரனுக்கு
இனிதாகவே திருமணம் பேசி முடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் இன்பமாக வாழும் வேளையில்
கடைக்குட்டியான சுமங்கலாவிற்கு
மனையாவழியில் மணமகனாக சண்முகலிங்கத்தின் கனிஷ்ட
புத்திரன்
அபிவிருத்தி உத்தியோகத்தராம் நேசதர்சனை
நேசமாகவே தேரந்தெடுத்து மருமகனாகவே
இணைத்துக் கொண்டே இன்பமும் கண்டார்
அடுக்கடுக்காக மூன்று மக்களையும்
திருமணம் செய்து வைத்தே
பேரக்குழந்தைகளோடு மனமகிழ்வு கண்டார்

லிங்கநகரினை வதிவிடமாக்கியே
நிரந்தரமாய் வாழ்ந்திடும் வேளையில்
பொல்லாத காலன் போட்டுடைத்ததுபோல்
ஓடிய நதியானது நின்றது போலவே
புதிய ஆண்டு இரண்டாயிரத்துப் பதினேழு
தைத்திங்கள் இருபத்து ஆறில்
மனைவியும் மக்களும் கதறியழவே
மண்ணக வாழ்வை முடித்துக் கொண்டே
உத்தராடம் அமாவாசை திதியில்
இறையடி சேர்தே தெய்வமுமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்று உம்மைக் காண்பேன் ஐயா

கணவனாய்க் கொண்ட நாள் முதல்
குறையேதும் அறியேன் ஐயா
ஓங்கி ஒலித்த உனது குரல்
மெல்ல மெல்ல அடங்கியதேனோ !

என் எண்ணப் பெட்டகத்தில்
உங்கள் நினைவுகள் நிழலாடுகின்றதே
எமக்காக வாழ்வதை விடுத்தே
உமக்காக வாழ்ந்தேன் ஐயா !

சிரித்த முகமும் ஓயாத கலகலப்பும்
எடுத்த காரியம் முடிக்கும் திறனும்
உறவுகளோடு பேச்சும் சிரிப்பும்
நினைக்கும் போதில் வாட்டி வதைக்குதையா

பிறப்பு என்பது மெய்ப்பட்டு வருமாயின்
மீண்டுமொருமுறை பிறப்பெடுக்கமாட்டியோ
பாதங்களை இதயத்தில் வைத்தே
கண்ணீரால் பூசிக்கின்றேன்.

அன்பு மனைவி
ராஜேஸ்வரி (பேபி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டு வருவாய் அப்பா !

தந்தையாய்ப் பெற்றதை நாளும்
பெரும் பாக்கியமாய் நினைத்தோம்
சொல்லாமல் கொள்ளாமலே
பிரிந்து போன மாயமென்ன

அன்பாய் அழைக்கும் போதே
அருகாய் வந்து நிற்போம்
சிரிக்கச் சிரிக்க கதைகள் சொல்வாய்
உற்ற பாதை காட்டிச் சென்றாய்

துன்பத்திலும் எமை சிரிக்க வைப்பாய்
காட்டிய பாதையில் பயணமும் செய்கிறோம்
நினைவாலே சிலைசெய்தே நாளும்
உமக்காக அஞ்சலி செய்கின்றோம்

விடியல் வரும் வேளையிலே
எம்மை அழவைத்துச் சென்றதேனோ,
தேடி அலைகின்றோம் தந்தையே
மீண்டும் வர மாட்டாயோ

அன்பு மக்கள்
சுஜேந்தினி, அனிசா, சுமங்கலா
பெறாமகள் தங்கலெட்சுமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரனை பிரிந்து விட்டோம்

துன்பம் தொலைந்து வரும் வேளை
எமைப்பிரிந்து சென்றதும் ஏனோ
மூத்தவர்கள் நாமிருக்க முந்திக் கொண்டாயே
வாழும் காலம் வரை ஒருபோதும் மறவோம்

நோயினால் துன்பமடைந்தாலும்
சகோதரங்களை நினைத்து மதித்தாய்
காலம் பொய்யென்பதை உணர்ந்தோம்
தம்பி அண்ணா மீண்டும் வரமாட்டாயோ,

காலம்தான் எம்மைப் பிரித்து வைத்தாலும்
கொண்ட பாசம் ஒருபோதும் மறையாது
தேசம் பிரிந்து தூரத்தே வந்தாலும்
அழகிய திருமுகம் நினைவில் ஆடும்

வாழ்ந்த காலமதை நினைத்தபடியே
உன்னை நினைத்தபடி வாழ்வோம்
பிறப்பொன்று உண்மையென்றால்
மீண்டும் சகோதரனாய் பிறப்பெடுப்பாயே

அன்புச் சகோதரர்கள்

சவுந்திரமணி
சின்னத்துரை
சண்முகராசா
மனோண்மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமாவைப் பிரிந்தேமே ..........

நெஞ்சமெல்லாம் உறவைச் சொல்லி
நேசமாய் வாழ்ந்த மாமாவே
வாழ்ந்தது போதுமென்று மறைந்ததேனோ
கள்ளமில்லாச் சிரிப்பும் கலகலப்பும்
கரைந்து காற்றோடு கலந்ததேனோ
மூவராய் எம்மை மருமக்களாயன்றியே
மக்களாகவே நினைத்திருந்தீரே
எமக்கெல்லாம் நல்ல மாமாவாய் விளங்கினீர்
உங்கள் திறமைகள் பற்றி ஊரார்
உயர்ந்தேற்றிய வேளைதனிலே
பெருமிதமாய் நினைத்திருந்தோமே
என்பு மாலை சூடிய சிவபெருமான்
அருகே செல்ல நினைத்து விரைந்து சென்றாயோ
பெயர் சொல்ல மக்களை வாழவைத்தே
பாதக்கமலம் துதிப்போம் நாமே

அன்பு மருமக்கள்

திநேஷ்
சுபாகரன்
நேசதர்சன்
சிறிஸ்கந்தராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மப்பாவைத் தேடுகின்றோம் ...

பிஞ்சி வாய் அசைத்தே நாம்
அஞ்சிவரும் வேளையெல்லாம்
அனைத்தெடுத்தே கொஞ்சிப் பேசுவாய்
அகமகிழ்ந்தே அருகில் நிற்போம்
விஞ்சிய உளமதில் கொடிய துன்பம் தந்து
எமைப்பிரிந்து எங்கே சென்றாயோ
தேடுகின்றோம் அழுத வழிகளோடே
அம்மப்பா எங்கே சென்றாயோ
உங்கள் பாதங்களுக்கு மலர்தூவி
அஞ்சலி செலுத்துவோம் நாமே

அன்புப் பேரக்குழந்தைகள்

மதுர்சனா
ஷஷ்டிகா
சரவணன்
கம்சன்
ரத்தீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்றார் – உறவுகள்

இளமைக்காலமுதலாய் நெருங்கி
உறவு சொல்லி அழைத்து மகிழ்ந்தோம்
பார்புகழும் படியாய் நல்ல சேவை செய்தீர்
இடப்பெயர்வுகள் கண்டே நாமும்
அல்லலடைந்து துடித்த வேளையெல்லாம்
சம்பூர் கிடைத்து வாழத்துடித்தோம்
நினைத்தபடி ஊரும் கிடைத்ததால்
மகிழ்வோடு காலம் சொல்லி வாழ்ந்தோம்
நோய் வந்து உம்மை வருந்தியபோதெல்லாம்
மீண்டு வருவாய் எனக் காத்திருந்தோம்
பூதவுடல் காட்டி மறைந்து போனாயே
மலர்தூவி இறைபதமடைய அஞ்சலிக்கின்றோம்

உற்றார் - உறவுகள்
சம்பூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றும்

தேறு தேறு நீ மணமே சித்தும் அசத்தும் இரண்டதனில்
தேறும் போதே இவ்வுடலும் தெளிவாய் அழியும்
- அசந்தென்றே

கூறும் பஞ்ச பூதத்தால் கூட்டிய இந்தப் பண்டமிது
நீறாய் நெருப்பில் அழிவதன்றி நிலைக்கும் உயிர்தான்
- அழிந்திலதே

கவியாக்கம்
கவிஞர் யோகாகனந்தன்
சம்பூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 1947 | | 2017 |
| 06 | | 01 |
| 06 | | 26 |



## அமரர் திரு. வயிரமுத்து மாணிக்கராசா

( ஓய்வு பெற்ற குடியேற்ற உத்தியோகத்தர்)

சம்பூரை பிறப்பிடமாகவும் லிங்கநகரை வசிப்பிடமாகவும் கொண்ட வயிரமுத்து மாணிக்கராசா அவர்கள் காலமானார். அன்னார் காலஞ்சென்ற வயிரமுத்து இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், திருமதி மா. இராஜேஸ்வரி (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களது அன்புக் கணவரும், கஜேந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பட்டிணமும் சூழலும்), அனிசா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கமநலசேவை நிலையம் - பள்குளம்), சுமங்கலா (ஆசிரியை – தி/சம்பூர் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், தினேஸ் (முகாமையாளர் - ஜினசேன), சுபாகரன் (பொறுப்பாளர் - தனு வெளியீட்டகம்), நேசதர்சன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - மாவட்டச் செயலகம்) ஆகியோரின் மாமனாரும், மதுர்ஷனா, சஷ்மிகா, சரவணன், கம்சன், ரத்தீஸ் ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும், தங்கலெட்சுமி (பெறாமகள்), சிறிஸ்கந்தராசா (மருமகன்), அமரர் சோமசுந்தரம், சின்னத்துரை, அமரர் குழந்தைவேல் (ஆசிரியர்), சண்முகராசா (ஓய்வு பெற்ற குடியேற்ற உத்தியோகத்தர் - கவிஸ்), சௌந்தரமணி, மனோன்மணி ஆகியோரின் சகோதரனும் , அமரர் புவனேஸ்வரி , அமரர் தெய்வநாயகி, கிருபரெத்தினம் (ஓய்வு பெற்ற வருமான மேற்பார்வையாளர்), தங்கரெத்தினம், கயிலைநாதன் (ஓய்வு பெற்ற மலேரியா தடையியக்க வெளிக்கள உத்தியோகத்தர்), குணராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

---

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.01.2017 வெள்ளிக்கிழமை 24/2, 2ஆவது ஒழுங்கை, லிங்கநகரில் இடம்பெற்று ந.ப. 12.00 மணியளவில் சம்பூர் 6ம் வட்டாரத்திற்கு அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு மாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக சம்பூர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

---

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

மண் பார்த்து | விண் பார்த்து
1947 * 06 * 06 | 2017 * 01 * 26



## அமரர். வயிரமுத்து மாணிக்கராசா

முன்னாள் சம்பூர் ஆலய பரிபாலன சபைத்தலைவர்

அம்பாளின் அருள்பெற்ற சம்பூரின் தலைமகனாய்
புகழ்பூத்த மன்னவனே மாணிக்கராசாவே
அரச தொழிலோடு சம்பூர் ஆலய பரிபாலன சபையில்
பல வருட காலம் தலைமைப் பதவி ஏற்று
ஆலய வளர்ச்சியோடு ஊருக்கும் பணிபுரிந்தீர்
பேருக்கும் நல்லவனாய் பேச்சுக்கும் வல்லவனாய்
யாருக்கும் துன்பமின்றி சமூகத்தில் வலம் வந்தாய்
ராஜேஸ்வரி ரீச்சர் மனைவியாய் கரம்பிடிக்க
மனமொத்த வாழ்வுக்கு மக்கள் மூவர் சாட்சியானார்
குடும்பம் குதூகலிக்க குலவிளக்காய் வாழ்ந்து வந்தீர்
நல்லதொரு தந்தையாய் சொல்லரிய கணவனாய்
வல்லதொரு மருமகனாய் வாய்த்த நல்மைத்துனனாய்
இல்லையென்று சொல்லாத இதயமுள்ள சோதரனாய்
தொல்லையேதும் தாராத துணையான உறவினனாய்
வாழ்ந்து வந்த உந்தனுக்கு வந்ததே மரண ஓலை
ஏங்குகிறாள் உன்மனையாள் இரங்குகின்றார் வாரிசுகள்
தாங்கரியபிரிவென்று தவிக்கின்றார் உறவினர்கள்
தூங்குகின்றாய் கவலையின்றி துயர்தாங்கமுடியாது
நாங்கள் சபையினர் கூடி தலை கவிழ்ந்து நிற்கின்றோம்
சிறுவயது தொட்டே காளியம்மன் பணி செய்தாய்
சிறப்பான வாழ்வு பெற்று சீரோடு வாழ்ந்து வந்தாய்
இறப்பென்று ஒன்றுவந்து இனிப்போதும் என்றுசொல்லி
சுறுக்காக அழைத்ததையா துயரோடு விடைவந்தோம்

*"உமது ஆத்ம சாந்திக்காக பத்திரகாளி அம்பாளை வேண்டி*
*எமது இதய அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்."*

*சம்பூர் ஆலய பரிபாலன சபையினர்*
*ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்*
*ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



**தோற்றம்**
**06**
**06**
**1947**


**மறைவு**
**26**
**01**
**2017**

செல்வம் செழித்தோங்கும் சீரிய மண்ணில் அவதரித்து,
அன்பும்,பண்பும்,அறனும் தன்னகத்தே கொண்டு கற்றோரும், மற்றோரும்
போற்ற இல்லறம் இனிதே நடத்தி கல்வியும்,பண்பும்
நிறைந்த நற் பிள்ளைச் செல்வங்களை பெற்று ,இப்பூவுலகில் வாழ்வாங்கு
வாழ்ந்து தன் வாழ்வை நிறைவாக்கிய அமரர். வைரமுத்து மாணிக்கராசா அவர்களின்
பிரிவுச் செய்தி கேட்டு பெரும் துயரடைந்தோம். அன்னாரின்
பிரிவில் ஆறாத் துயரிலிருக்கும் குடும்பத்தாருக்கும்,
உறவினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு,
அன்னாரின் ஆத்மா நற்கதி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர்,ஆசிரியர்கள்,மாணவர்கள்**
**பாடசாலை அபிவிருத்திக் குழு,**
**பழைய மாணவர் சங்கம்**
**தி/மூ/சம்பூர் மகாவித்தியாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்ப விளக்காய் நின்று வழிகாட்டி 26.01.2017 ம் திகதியன்று எம்மை விட்டுப்பிரிந்த எமது அன்புத் தந்தையின் மறைவு கேட்டு உடன் வந்து உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் நேரில் வந்து ஆறுதல் கூறியோருக்கும், மலர் மாலை அணிவித்தோருக்கும் மலர்வளையம் வைத்தோருக்கும் , கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் இரங்கல் உரை ஆற்றியோருக்கும் இம்மலரைத் தயாரிப்பதலில் முன்னிறு உதவிகள் புரிந்தோருக்கும் ஆத்ம சாந்திக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

“ எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு ”

## நன்றி

- குடும்பத்தினர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org